

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து அலங்கியம் பள்ளிவாசலில் கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தொழுகை முடித்த இஸ்லாமிய பொதுமக்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் விருதுநகர் வடக்கு, தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், அலங்கியம் ஊராட்சி கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கரூர் துயரம்: இன்னமும் தனது

# தவறை உணராதவராகவே இருக்கிறார் விஜய்!

### தி.மு.க. ஐ.டி. விங் விமர்சனம்!

கரூர்,செப்.28-

கரூரில் 41 உயிர்கள் பறி போன போது, நெஞ்சில் ஈரம் இல்லாமல் பாதரசம் போல் தப்பித்து ஓடிய விஜயை மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள் என தி.மு.க. ஐ.டி. விங் தெரிவித்துள்ளது.

தி.மு.க. ஐ.டி. விங் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில், கரூரில் 41 உயிர்களின் அழுகுரல்கள் இன்றும் கேட்டுக்கொண்டே இருப்பதாகவும், 41 உயிர்கள் பறிபோன நிலையில், அது பற்றி கொஞ்சமும் நெஞ்சில் ஈரம் இல்லாமல் விஜய் ஓடிய காட்சிகள் இன்னும் கண் முன்னே ஓடிக்கொண்டிருப்பதாகவும் விமர்சித்துள்ளது.

ஒரு வருடம் ஆனாலும் இன்னமும் தன் தவறை உணராதவராகவே விஜய் இருக்கிறார் என தி.மு.க. ஐ.டி. விங் சாடியுள்ளது.

கரூர் துயரச் சம்பவத்தைத் தமிழ்நாடு என்றைக்கும் மறக்காது என்றும் நெஞ்சில் ஈரம் இல்லாமல் தப்பித்து, பாதரசம் போல் ஓடிய விஜயையும் மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள் என்றும் தி.மு.க. ஐ.டி. விங் தெரிவித்துள்ளது.

# சத்துணவு திட்டத்தில் முட்டை நிறுத்தம் - நிர்வாகத் திறனற்ற த.வெ.க. அரசு!

## முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் கடும் கண்டனம்!

தூத்துக்குடி, செப். 28-

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் சத்துணவுத் திட்டத்தின் கீழ் மதிய உணவுடன் வழங்கப் பட்டு வந்த முட்டை திடீரென நிறுத்தப்பட்டுள்ளதாக வரும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. நாமக்கல், ஈரோடு, சேலம், திருநெல்வேலி, நாகப்பட்டினம், திருப்பூர், மயிலாடுதுறை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்ட அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்கு சத்துணவில் முட்டை வழங்கப்படவில்லை என புகார் எழுந்துள்ளது.



தமிழ்நாட்டில் காமராசரால் தொடங்கப்பட்டு, எம்.ஜி.ஆரால் 'சத்துணவுத் திட்டமாக' விரிவுபடுத்தப் பட்ட இந்தத் திட்டத்தில், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1989ம் ஆண்டு முதன்முதலில் இரண்டு வாரங்களுக்கு ஒரு முட்டை வழங்கும் முறையைக் கொண்டு வந்தார். பின்னர் ஊட்டச் சத்து குறைபாடுகளைப் போக்க, 2010ம் ஆண்டு முதல் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பள்ளிக் குழந்தைகளுக்கு வாரத்திற்கு 5 நாட்கள் முட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த 16 ஆண்டுகளாக வாரம் 5 நாட்கள் சீராக வழங்கப்பட்டு வந்த முட்டைகள், தவெக ஆட்சிக்கு வந்திருக்கும் நிலையில் திடீரென நிறுத்தப்பட்டிருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

பள்ளி மாணவர்களுக்கு சத்துணவோடு சேர்த்து முட்டை வழங்காததன் பின்னணியில், எண்ணிக்கைக்கு ஏற்ற முட்டை கொள்முதல் முறையாக நடைபெறாததும், தவெக ஆட்சிக்கு வந்த பிறகு சமூக நலத் துறை முற்றிலுமாக முடங்கியிருப்பதுமே காரணம் எனத் தெரிய வருகிறது. 'மாற்றம், மாற்றம்' என தம்பட்டம் அடிக்கும் தவெக அரசு, சத்துணவை சத்தில்லாத உணவாக மாற்றி மாணவர்களுக்கு வழங்கி ஏமாற்றத்தின் மொத்த வடிவமாகத் திகழ்கிறது.

காமராஜர், எம்.ஜி.ஆர்., கலைஞர் ஆகியோரால் பார்த்துப் பார்த்து கொண்டு வரப்பட்ட முத்திரைத் திட்டங்களையே சீராக செயல்படுத்த முடியாத நிர்வாகத் திறனற்ற தவெக அரசு, முட்டை விநியோகத்தை உடனடியாக சீர்செய்ய வேண்டும் என துறை அமைச்சரையும் தமிழ்நாடு முதலமைச்சரையும் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் மேற்கு ஒன்றியம் காளிப்பாளையம் ஊராட்சியில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு தீவிரமாக வாக்கு சேகரித்தனர். மேலும் வீடுகளின் கதவுகளில் தேர்தல் பிரச்சார ஸ்டிக்கர்களை ஒட்டியும், துண்டு பிரசுரங்களை வழங்கியும் பொது மக்களிடம் ஆதரவு திரட்டினர். வாக்கு சேகரிக்கும் நிகழ்வில் கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூபன் ஹபீபுர் ரகுமான்,ஒன்றிய செயலாளர் சிவக்குமார்,தென்காசி தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப பணி துணை அமைப்பாளர் சபிக்அலி உட்பட கழகத்தினர் பலர் சென்றனர்.



புதுச்சேரி மாநிலம், தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தல் வெற்றி வேட்பாளர் சேது (எ) சேதுசெல்வம் அவர்களை ஆதரித்து, புதுவை மாநில தலைமை கழக பொறுப்பாளர், கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன், புதுவை மாநில திமுக அமைப்பாளர் இரா. சிவா, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன், தட்டாஞ்சாவடி தொகுத்திக்குட்பட்ட பள்ளிவாசலில் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்கள். உடன் புதுவை சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் ஏ.எம்.எச்.நாஜிம், வானூர் சட்டமன்ற உறுப்பினர் தி.கௌதம் புதுவை மாநில கழக நிர்வாகிகள் மற்றும் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

## எஸ்.ஐ.ஆர். மூலம் கோடிக்கணக்கான வாக்காளர்களை நீக்கியது

# தேர்தல் ஆணையத்தின் தேசத் துரோகம்!

## மூத்த வழக்கறிஞர் கபில்சிபல் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, செப். 28-

எஸ்.ஐ.ஆர். நடவடிக்கையின் போது வாக்காளர் பட்டியலில் இருந்து கோடிக்கணக்கானவர்களை தேர்தல் ஆணையம் நீக்கியது தேசத் துரோகக் குற்றம் என மூத்த வழக்கறிஞர் கபில்சிபல் குற்றம் சாட்டி உள்ளார்.



தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளித்த கபில்சிபல், தேர்தல் ஆணையம் நாடு முழுவதும் மேற்கொண்ட SIR நடைமுறையின் கீழ், கோடிக்கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டது தொடர்பாக கடும் விமர்சனங்களை முன் வைத்தார்.

தேர்தல் ஆணையத்தின் மையப்படுத்தப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்கள் நீக்கப்பட்டது தேசத் துரோகக் குற்றத்திற்கு சமமானது என்றும் கபில் சிபல் குற்றம்சாட்டினார்.

தேர்தல் ஆணையத்தின் புதிய மென்பொருள் கட்டுப்பாடுகளால், வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்க்கவும் நீக்கவும் சட்டப்பூர்வ அதிகாரம் கொண்ட வாக்குச்சாவடி நிலை அதிகாரிகளின் உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் பறிக்கப்பட்டதாகவும் கபில் சிபல் தெரிவித்தார்.

புதிய வாக்காளர் சேர்க்கைக்கான படிவம் 6 மற்றும் ஒட்டுமொத்த வாக்காளர் பட்டியல் தரவுத் தளத்தையும் மையப்படுத்துவதில் தேர்தல் ஆணையத்திற்குள்ளேயே பிற ஆணையர்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

தமிழ்நாடு, பீகார், மேற்குவங்கம், உள்ளிட்ட பல மாநிலங்களில் உண்மையான வாக்காளர்களின் பெயர்கள் திட்டமிட்டு நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

தேர்தல் ஆணையர்களுக்குள் ஏற்பட்ட மோதல்கள் குறித்த செய்தி தவறானது எனில், அவதூறு வழக்கு தொடர தேர்தல் ஆணையம் தயங்குவது ஏன் என்றும் கபில் சிபல் கேள்வி எழுப்பினார்.

SIR மென்பொருளை வடிவமைப்பதில் அல்லது இயக்குவதில் ஈடுபட்ட தனியார் நிறுவனங்களின் பெயர்களை இந்தியத் தேர்தல் ஆணையம் இது வரை வெளியிடவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது.

## பள்ளி மாணவர்களுக்கு சத்துணவில் முட்டை வழங்குவதில் குழப்பம்!

# காரணமான அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை தேவை!

### தமிழ்நாடு உயர்நிலை – மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்க மாநிலத் தலைவர் ஆ.மலைக்கொழுந்தன் அறிக்கை!

கரூர், செப். 28-

தமிழ்நாடு உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்க மாநிலத் தலைவர் ஆ.மலைக் கொழுந்தன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முழுவதும் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சத்துணவுத் திட்டத்தில் மாணவர்களுக்கு முட்டை வழங்குவது தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது. இதற்கு முன்பு இதுபோன்ற குழப்பம் எப்போதும் ஏற்பட்டதில்லை.

ஆனால், 25.09.2026 அன்று மட்டும், சில மாவட்டங்களில் மாணவர்களுக்கு சத்துணவுடன் முட்டை வழங்கப்பட்டுள்ள நிலையில், சில மாவட்டங்களில் மாணவர்களுக்கு முட்டை வழங்கப்படாமல் சத்துணவு மட்டும் வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒரே மாநிலத்தில், ஒரே அரசு திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவில் இவ்வாறு மாவட்ட வாரியான வேறுபாடு ஏற்பட்டிருப்பது மிகவும் அதிர்ச்சியளிக்கிறது. இதனால் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே குழப்பமும் ஏமாற்றமும் ஏற்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு வழங்கப்படும் முட்டை என்பது கூடுதலாக வழங்கப்படும் சாதாரண உணவுப் பொருள் அல்ல. அது மாணவர்களின் உடல் வளர்ச்சி, மூளை வளர்ச்சி மற்றும் ஊட்டச்சத்து தேவைக்கு முக்கியமான உணவாகும்.

எனவே, 25.09.2026 அன்று ஏற்பட்டுள்ள இந்தக் குழப்பத்திற்கான உண்மையான காரணத்தை அரசு உடனடியாக கண்டறிய வேண்டும். எந்த அதிகாரியின் உத்தரவு அல்லது நிர்வாகத் தவறின் காரணமாக இந்த நிலை ஏற்பட்டது என்பதை உரிய விசாரணை மூலம் கண்டறிய வேண்டும்.

மேலும், இந்தக் குழப்பத்திற்கு காரணமான அரசு அதிகாரிகள் அல்லது அலுவலர்களின் நடவடிக்கை கண்டறியப்பட்டு, தவறு உறுதி செய்யப்பட்டால் அவர்கள்மீது விதிமுறைகளின்படி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என எங்கள் சங்கத்தின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

இனிவரும் காலங்களில் இதுபோன்ற குழப்பம் ஏற்படாத வகையில், தமிழ்நாடு முழுவதும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவு மற்றும் முட்டை வழங்கும் நடைமுறை ஒரே சீராகவும் தடையின்றியும் நடைபெறுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

மாணவர்களின் ஊட்டச்சத்து தொடர்பான அரசு திட்டங்களில் நிர்வாகக் குழப்பம் ஏற்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. 25.09.2026 அன்று ஏற்பட்டுள்ள இந்தக் குழப்பத்திற்கு காரணமானவர்கள் யார் என்பதை அரசு கண்டறிந்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் மேற்கு ஒன்றியம் காளிப்பாளையம் ஊராட்சி வா.நா. வலசையில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் பங்கேற்று திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டார். உடன் தென்காசி தெற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார்,ஆலங்குளம் தெற்கு ஒன்றிய செயலாளர் சிவக்குமார், தகவல் தொழில்நுட்ப அணி சபிக்அலி, சையது பாஷா,சலீம் மற்றும் காளிப்பாளையம் பகுதி கழக தோழர்கள் உள்ளனர்.